ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2394/38 – 2024 ජූලි මස 24 වැනි බදාදා – 2024.07.24

2394/38 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III - காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின் குழுகம்மன சிறு பிரிவின் இலக்கம் 421 வேகிரிய கிராம அலுவலர் பிரிவின் வேகிரிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட MAHA/HRS/2022/131 ஆம் இலக்க மற்றும் 2022.07.30 ஆந் திகதியிடப்பட்ட மேம்படுத்தப்பட்ட வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பெயர்கள் மற்றும் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுக்கான எல்லைகள் :

01. துண்டு 'A' - லூலேலிவெலே கும்புர - விஸ்தீரணம்: **0.4186 ஹெக்டயார்**

வடக்கு: அடிப்பாதை; கிழக்கு: அடிப்பாதை மற்றும் துண்டு B; தெற்கு: துண்டு B மற்றும் அடிப்பாதை; மேற்கு: அடிப்பாதை மற்றும் ஏ. ஆர். சேரசிங்க உரிமை கோரும் லூலேலிவெலே.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/12/2018/WS/291.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, மே 13.

EOG 07 - 0233